[1981 ஏப்ரல் 1

மும் எங்களுக்குக் கட்டுப்படியாகவில்லை, ஆகையால் மின்சாரம் தர மாட்டோம் என்றுதான் சொல்லவேண்டிவரும். அந்த முறை தவறு. ஒரு தொழிலை நடத்துகிறவர், அந்தத் தொழிலை கட்டுப்படியாகக்கூடிய வகையில் நடத்தும் பொறுப்பு அவரைச் சார்ந்தது. அதை கட்டுப்படியாகவில்லை என்று சொல்லி மின் ாரவாரியத்தின் தலையிலே சுமத்தக்கூடாது. ஒரு மாத பாக்கி வந்தவுடனே ஏன் மின் துண்டிப்பு செய்யவில்லை என்று கேட்டார்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். ஏன் துண்டிப்பு செய்யவில்லை என்பதற்கு காரணம் தெரியவில்லை; துண்டிப்புச் செய்யவில்லை என்பது தெரிகிறது. 3 மாத டெபாசிட் வாங்கவில்லையா என்று கேட்டார்கள். இவ்வளவு பாக்கி வைத்திருக்கிறவர்களுக்கு 3 மாத டெபாசிட் என்பது "யானைப் பசிக்கு சோளப் பொரி" போன்றது. மேலும் இதிலே மின் சாரக் கட்டணப் பாக்கி ஒரு கோடி என்றால், அதற்கான அபராதம் சுமார் $7\frac{1}{2}$ கோடி ரூபாய். இதிலே 3 மாத டிபாசிட்டை வைத்து என்ன செய்ய முடியும்?

புளியமரங்களுக்கான பட்டாக்களை ஒப்படை செய்தல்.

*வினா எண் 472—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசுக்குச் சொந்தமான பலன் தரும் புளியமரங்கள் தனிப்பட்டவர்களுக்கு 2–சி பட்டா வழங்கப்பட் டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஊராட்சிகளில் வருமானம் பெருக்கும் வகையில் அவைகளை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு மறு ஒப் படை செய்யும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) அரசுப் புறம்போக்கு நிலங்கள் 1961 முதல் ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு ஒப்படை செய்யப்படுவதற்கு முன் தனிப்பட்டவர்களுக்கு மேற்படி புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் மீது வழங்கப்பட்ட 2-சி பட்டாக்கள் வழக்கில் உள்ளன.

(ஆ) மறு ஒப்படை செய்யும் உத்தேசம் தற்போது இல்லை. எனினும், அவற்றின் மூலம் கிடைக்கும் வரி ஊராட்சிகளின் நிதி யில் சேர்க்கப்படுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர வர்களே, 1961 ஆம் ஆண்டுக்கு முன்பே இந்த மாநிலத்தில் சுமார் 12 இலட்சம் பயன்தரும் புளியமரங்கள் தனிப்பட்டவர்

1981 ஏப்ரல் 1]

ளுக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அவைகள் மூலம் கிடைக்கின்ற வரி ஊராட்சிகளின் நிதியில் சேர்க்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மரத்திலிருந்தும் 100 ரூபாய், 200 ரூபாய் வருமானம் வருகிறது. ஆனால் 3 ரூபாய் கட்டணம்தான் வசூல் செய்யப்படுகிறது. இந்த மரங்களை ஊராட்சிகளுக்கே ஒப்படை செய்தால் அந்த வருமானம் முழுவதும், கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் மாநிலம் முழுவதிலிருந்தும், ஊராட்சிகளுக்கே கிடைக்கும். ஆகவே இந்த மரங்களை எல்லாம் ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, 2-சி பட்டா வழங்கப்பட்டு, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. புறம்போக்கு நிலங்களில் அவர்களே மரங்களை வைத்து வளர்த்து அதிலிருந்து வருகிற பலன்களை அவர்கள் அனுபவித்துக் கொள்கின்ற முறையில் 2-சி பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக் கணக்கான ரூபாய் அவைகள் மூலம் வருமானம் வரும்போது ஏன் அரசாங்கம் எடுத்துக் கொள்ளக்கூடாது, அல்லது ஊராட்சிகளுக்கு ஒப்படை செய்யக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மாநிலம் பூராவும் 2-சி பட்டா எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது; எங்கெங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது; வருமானம் என்ன; எப்படி சீர் செய்வது; வருவாயை எப்படி அரசு கணக்கில் சேர்ப்பது என்பன போன்றவைகளை அரசு யோசித்து, ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, 3 ரூபாய் தற்போது வசூல் செய்யப்படுகிறது. இந்த 2-சி பட்டா என்பது right to collect the usufructs அனுபவத்திற்கு மட்டும் இந்தக் கட்டணத்தை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்போது தருவதை விட இன்னொரு நபர் கூடுதல் தொகை நான் தருகிறேன் என்று சொல்லி, கூடுதல் தொகை தர முன்வந்தால் முந்தியவர் உரிமையை ரத்து, செய்து, கூடுதல் தொகை தருபவர் அனுபவிக்கும் உரிமையை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, 2-சி பட்டாவில் குறைபாடு இருந்தாலோ அரசுக்கு அதனால் வருகின்ற வரும்படி குறைவாக இருக்கும் என்ற நிலைமை இருந்தாலோ அதிலே இருக்கின்ற நிலைமைகளை மாற்றி ஆவன செய்வதற்கு அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.